2

## முக்கிய சிறப்புக் குறிப்பு

## இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது அதனுடன் தொடர்புடைய முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகள்[1]

| | |
|---|---|
| **மத்திய வங்கித்தொழில்** | |
| 2023 செத்தெம்பர் 15 | நாணய விதிச் சட்டத்தை (அத்தியாயம் 422) இரத்துசெய்வதற்காக, இலங்கை மத்திய வங்கியின் தாபித்தலை வழங்குவதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதன் இடர்நேர்விளைவான விடயங்களை வழங்குவதற்குமான சட்டமொன்றாக 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம் சட்டமாக்கப்பட்டது. |
| 2023 ஒத்தோபர் 03 | நிதி அமைச்சருக்கும் மத்திய வங்கிக்கும் இடையில் 2023 ஒத்தோபர் 05 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்பு உடன்படிக்கையானது 5 சதவீதத்தில் காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைப் பேணுவதற்கு தேவைப்படுத்தும் வகையில், மத்திய வங்கிக்கான பணவீக்க இலக்கிடலை நிர்ணயித்துள்ளது. |
| **நாணயக் கொள்கை** | |
| 2023 சனவரி 02 | 2023 சனவரி 16 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில், குறித்த உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கான துணைநில் வைப்பு வசதியின் கிடைப்பனவானது கலண்டர் மாதமொன்றுக்கு உயர்ந்தபட்சம் ஐந்து (05) தடவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதேவேளை குறித்த உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கான துணைநில் கடன்வழங்கல் வசதியின் கிடைப்பனவு ஏதேனும் வழங்கப்பட்ட திகதியில் அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் 90 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. |
| 2023 மாச்சு 03 | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 100 அடிப்படை புள்ளிகளினால் முறையே 15.50 சதவீதத்திற்கும் 16.50 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன. |
| 2023 யூன் 01 | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 13.00 சதவீதத்திற்கும் 14.00 சதவீதத்திற்கும் 250 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. |
| 2023 யூலை 06 | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 11.00 சதவீதத்திற்கும் 12.00 சதவீதத்திற்கும் 200 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. |
| 2023 ஓகத்து 09 | 2023 ஓகத்து 16 தொடங்குகின்ற ஒதுக்குப் பேணுதல் காலப்பகுதி தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் நியதி ஒதுக்குத் தேவைப்பாடானது 2.00 சதவீதத்திற்கு 2.00 சதவீதப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டது. |
| 2023 ஒத்தோபர் 05 | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 10.00 சதவீதத்திற்கும் 11.00 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. |
| 2023 நவெம்பர் 24 | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 9.00 சதவீதத்திற்கும் 10.00 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. |
| 2024 பெப்புருவரி 09 | 2024 பெப்புருவரி 16 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில், நாட்காட்டி மாத காலப்பகுதயில் துணைநில் கடன்வழங்கல் வசதி மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டு துணைநில் வைப்பு வசதி மீதான கட்டுப்பாடு ஐந்து தடவைகள் தொடக்கம் (05) பத்து தடவைகள் வரை (10) தளர்த்தப்பட்டது. |
| 2024 மாச்சு 26 | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே, 50 அடிப்படைப் புள்ளிகளினால் 8.50 சதவீதத்திற்கும் 9.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| | 2024 ஏப்பிறல் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், துணைநில் வைப்பு வசதி மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டது. |
| **சிறப்புக் கொடுகடன் திட்டங்கள்** | |
| 2023 செத்தெம்பர் 15 | 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டமாக்கலுடன், சௌபாக்யா கடன் திட்டம் மற்றும் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்திக் கடன் திட்டம் ஆகியவற்றின் தொழிற்பாடுகளை மத்திய வங்கி இடைநிறுத்தியது. |
| 2024 சனவரி 03 | மத்திய வங்கியின் ஆளுகைச் சபை எதிர்காலத்தில் புதிய அரசாங்கம் மற்றும் நன்கொடையாளர் நிதியளிப்பு கடன் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதில்லை என்ற கொள்கை தீர்மானத்தை எடுத்தது. |
| **கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்** | |
| 2023 பெப்புருவரி 01 | யூனியன்பே இன்டர்நெஷனல் கோபரேஷன் லிமிடெட், சீன மற்றும் இந்திய தேசிய கொடுப்பனவுகள் கூட்டுத்தாபனம் இன்டர்நெஷனல் பேமன்ட்ஸ் லிமிடெட் ஆகியவற்றுடன் லங்காபே பிறைவட் லிமிடெட் இணைக்கப்பட்டு, சீன மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு லங்காகியூஆரின் (LANKAQR) மூலம் தமது கொடுப்பனவுப் பணப்பைகளைப் பயன்படுத்துவதற்கு இயலச்செய்தது. 2023 பெப்புருவரியிலிருந்து சீன சுற்றுலாப் பயணிகளால் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு இயலுமாகவிருந்ததுடன் 2024 பெப்புருவரி 12 தொடக்கம் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கான கொடுக்கல்வாங்கல்கள் தொடங்கப்பட்டன. |
| 2023 மே 08 | வெளிநாட்டு கொடுப்பனவு செயலிகளைப் பயன்படுத்தி, லங்காகியூஆரின் மூலம் செலுத்தப்படும் கொடுப்பனவுகளுக்கான 1.8 சதவீதம் கொண்ட வணிகர் கழிவிடல் வீதமொன்றுக்கு ஒப்புதலளிக்கப்பட்டது. உள்நாட்டு லங்காகியூஆர் கொடுப்பனவுகளுக்கு 0.5 சதவீதம் கொண்ட வணிகர் கழிவிடல் வீதம் காணப்படுகின்றது. |
| 2023 ஓகத்து 31 | கொடுப்பனவு நடைமுறைகள் அல்லது பணிகளுடன் தொடர்புடைய பாதுகாப்பற்ற, திருப்தியற்ற அல்லது நியாயமற்ற நடைமுறைகள் தொடர்பாக பொது மக்களிடமிருந்து தகவல்களைச் சேகரிப்பதற்கான மும்மொழி இணையத் தளப் படிவம் உருவாக்கப்பட்டது. |
| 2023 திசெம்பர் 29 | லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளம், நேரடிப் பற்று வசதி, பகிரப்படும் உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் வசதி, அத்துடன் அரசாங்க டிஜிட்டல் கொடுப்பனவுத் தளம் போன்ற பல்வேறு டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல் முன்னெடுப்புகளில் பங்கேற்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளை மத்திய வங்கி கட்டாயப்படுத்திய அதேவேளை கொடுக்கல்வாங்கல்களுக்கான உண்மை நேர அறிவித்தல்களை இயலச்செய்தல், பின்தங்கிய பிரதேசங்களில் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களை ஊக்குவித்தல், டிஜிட்டல் வழிகளின் மூலம் மேற்கொள்ளப்படும் கொடுகடன் அட்டைத் தீர்ப்பனவுகள் உடனடியாக இற்றைப்படுத்தப்படுவதைத உறுதிப்படுத்தல் அத்துடன் வணிகர் கழிவிடல் வீதத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்க வேண்டாம் என்று உரிமம்பெற்ற நிதியியல் கையகப்படுத்துபவர்களுக்கு அறிவுறுத்துவதன் மூலம் டிஜிட்டல்கொடுக்கல் வாங்கல்ளுக்கான தொடர்புத் தளத்தை கட்டாயப்படுத்தல் போன்ற முன்னுரிமைகளை வலுப்படுத்தியது. |

[1] 2023 சனவரி 01 தொடக்கத்திலிருந்து 2024 மாச்சு 28 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகளையும் கிட்டிய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய கொள்கை வழிமுறைகளையும் உள்ளடக்குகின்றது.

இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது தொடர்புடைய கொள்கை வழிமுறைகளின் விரிவான பதிப்பும் 2023 சனவரி 01 தொடக்கம் 2024 மாச்சு 28 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய இறைக் கொள்கை வழிமுறைகள் எனும் இணையதள இணைப்பில் கிடைக்கப்பெறுகின்றன.

| | |
|---|---|
| 2023 திசெம்பர் 29 | இலத்திரனியல் பணப் பைகளின் மூலம் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களுடன் இணைந்து வெளிநாட்டுப் பணவனுப்பல்களை ஊக்குவிக்கும் வகையில், உயர்த்தப்பட்ட மற்றும் அடிப்படை இ-பணப் பை எல்லைகள் 2024 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில், முறையே ரூ.50,000.00 மற்றும் ரூ.10,000.00 போன்ற தொகைகளிலிருந்து ரூ.150,000.00 மற்றும் ரூ.20,000.00 தொகைகளுக்கு உயர்த்தப்பட்டது. |
| 2024 சனவரி 17 | 2024 ஏப்பிறல் 01 தொடக்கத்திலிருந்து கொடுப்பனவுத் தொகை ரூ.10,000 தொகைக்கு சமமானதாக அல்லது அதை விஞ்சுகின்ற கொடுக்கல்வாங்கல்களுக்கு இணைக்கப்பட்ட நிதியியல் நிறுவனத்திலிருந்து ஒரு தடவை கடவுச்சொல்லொன்றை கோருவதற்கு ஜஸ்ட்பே கொடுப்பனவு முறைமையைப் பயன்படுத்தும் வகையில் செல்லிடத்தொலைபேசி செயலிகளை மத்திய வங்கி கட்டாயப்படுத்தியது. எந்தவொரு நிதியியல் நிறுவனத்திலிருந்தும் கணக்குகளை இணைப்பதற்கும் செல்லிடத் தொலைபேசி செயலியினூடாக இணைக்கப்பட்டுள்ள கணக்குகளிலிருந்து நிதியங்களைப் பெறுவதன் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் ஜஸ்ட்பே பயனர்களுக்கு வசதிப்படுத்துகின்றது. |
| 2024 பெப்புருவரி 01 | நேபாள்பே கியூஆர் (NEPALPAY QR) செல்லிடத் தொலைபேசி செயலிகளின் மூலம் நேபாள சுற்றுலாப் பயணிகளினால் மேற்கொள்ளப்படும் லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களை ஏற்றுக்கொள்வதற்கான நேபாள் கிளியரிங் அவுஸ் லிமிடெட்டுடன் இணைவதற்கு லங்காபே (பிறைவட்) லிமிடெட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

**பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்**

| | |
|---|---|
| 2023 மாச்சு 03 | இணங்குவித்தல் குறைபாடுகள் மீதான உரிய விழிப்புக்கவனத்திற்காக அழைப்புவிடுத்து அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2023 யூன் 07 | உண்மைச் சொத்துத் துறை பற்றிய நிறுவனம்சார் இணங்குவித்தல் மீது 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கை உண்மைச் சொத்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. |
| 2023 யூன் 13 | உள்நாட்டு இலத்திரனியல் நிதிய மாற்றல் அடிப்படை அளவுக் கொடுக்கல்வாங்கல்களை நிதியியல் உளவறிதல் பிரிவின் goAML முறைமைக்கு அறிக்கையிடுவது பற்றி 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வழிகாட்டல் வழங்கப்பட்டது. |
| 2023 ஓகத்து 07 | 2023-2028 காலப்பகுதிக்கு இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் மீதான தேசியக் கொள்கையினைப் பின்பற்றுவதற்காக அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றது. |
| 2023 செத்தெம்பர் 01 | சட்டத்தரணிகள் மற்றும் நொத்தாரிசுகளுக்காக பணம் தூயதாக்கலுக்கெதிராக மற்றும் பங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் இணங்குவித்தல் மீது 2023இன் 02ஆம் இலக்க வழிகாட்டல் வழங்கப்பட்டது. |

**வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவமும் பன்னாட்டுத் தொழிற்பாடுகளும்**

| | |
|---|---|
| 2023 சனவரி 26 | "உள்முக முதலீடுகள் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள் - உள்முக முதலீடுகள் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள் திட்டம்" மீது விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை இரத்துச்செய்தல். |
| | மத்திய வங்கியின் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா வாங்குதல்-விற்றல் மற்றும் விற்றல்-வாங்குதல், வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்கள் என்பவற்றில் பங்கேற்பதன் மீது வங்கிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல். |
| 2023 பெப்புருவரி 24 | மாற்றல் செய்யப்பட்ட உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்களினதும் ஏற்றுமதி பெறுகைகளுடன்/வருவாய்களுடன் தொடர்புடைய மாற்றப்பட்ட பணித் துறையினதும் கட்டாயமாக மாற்றல்செய்யப்பட்ட ஏற்றுமதி பெறுகைகளின் எஞ்சிய பெறுமதியினதும் கணக்கில் உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் மத்திய வங்கிக்கு வாராந்த கட்டாய வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகளை 2023 பெப்புருவரி 27 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைத்தல். |
| 2023 பெப்புருவரி 27 | சிறப்பு வெளிநாட்டு நாணய கணக்கை - முதலீட்டாளர் திறந்து பேணுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அனுமதிக்கும் வகையில், 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2023 மாச்சு 03 | "உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" மற்றும் "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு மத்திய வங்கியினால் 2023 மாச்சு 07 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் மத்திய வங்கியினால் வழங்கப்படும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை இரத்துச்செய்தல். |
| 2023 யூன் 28 | கட்டளையின் திகதியிலிருந்து தொடங்குகின்ற ஆறு மாதகாலப்பகுதிக்கான தெரிவுசெய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய வெளிமுகப் பணவனுப்பல்களை இடைநிறுத்துவதற்கு/மட்டுப்படுத்துவதற்கு 2023 யூன் 28ஆம் திகதியிடப்பட்ட 2338/40ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் கட்டளை வெளியிடப்பட்டது. |
| 2023 திசெம்பர் 04 | 2019ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிச் சட்ட வர்த்தக மைய ஒழுங்குவிதிகளின் நியதிகளில் உள்நாட்டுச் சந்தைக்கு பொருட்களை/ சாதனங்களை விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட தொழில்முயற்சிகள் உள்ளடங்கலாக, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| | 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிச் சட்ட வர்த்தக கமைய ஒழுங்குவிதிகளின் நியதிகளில் உள்நாட்டுச் சந்தைக்கான பொருட்களை/சாதனங்களை அனுமதிக்கின்ற இலங்கையில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தொழில்முயற்சிகளுக்கான கொடுப்பனவுகளை அனுமதிக்கும் வகையில், வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடைமையாளர்களுக்கான கடன்வசதிகள் தொடர்பான 2023ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2023 திசெம்பர் 20 | கட்டளைத் திகதியிலிருந்து தொடங்குகின்ற ஆறுமாத காலப்பகுதிக்கு முன்னர் வழங்கப்பட்ட கட்டளைகளின் மூலம் விதிக்கப்பட்ட வெளிமுக மூலதனம் மற்றும் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய சில இடைநிறுத்தல்களை/மட்டுப்படுத்தல்களைப் படிப்படியாக தளர்த்தும் வகையில், 2023 திசெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2363/26ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் கட்டளை வெளியிடப்பட்டது. |
| 2024 சனவரி 01 | 2024 யூன் 30 வரை அதன் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதன் மூலம், நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு சிறப்பு வெளிநாட்டு நாணய கணக்குகள் - முதலீட்டாளர் தொடர்பாக 2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |

**படுகடன் முகாமைத்துவம்**

| | |
|---|---|
| 2023 பெப்புருவரி 13 | நேரடி வழங்கல் தள ஏற்பாட்டின் கீழ் இலங்கை அபிவிருத்தி முறிகளை வழங்குதல் இடைநிறுத்தப்பட்டது. |
| 2023 மாச்சு 16 | "2023ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் (தகவலை வெளிப்படுத்தல்) ஒழுங்குவிதிகள்" வழங்கப்பட்டன. |

**2023 ஏப்பிறல் 04**

சாதாரண கட்டம் II கால இடைவெளியின் போது மத்திய வங்கியின் நாணயக் கொள்கை அறிவித்தல் அறிவிக்கப்படாமலிருக்கும் சந்தர்ப்பங்களில், திறைசேரி உண்டியல் ஏலமொன்றிற்குப் பின்னர் உடனடியாக ஒரு மணித்தியால காலப்பகுதியில் அல்லது ஏல நாளில் தொழிலை முடிவுறுத்தும் காலப்பகுதியில், எது இறுதியாக இடம்பெறுகின்றதோ அக்காலப்பகுதியில் குறித்த திறைசேரி உண்டியல் ஏலத்தின் கட்டம் II இல் நிறைவேற்றப்படுகின்றது.

**2023 மே 12**

1923ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் திறைசேரி உண்டியல்கள் வழங்கல் மீதான மட்டுப்படுத்தலை ரூ. 5000 பில்லியனிலிருந்து ரூ. 6,000 பில்லியன் வரை அதிகரிப்பதற்கான தீர்மானமொன்றிற்கு பாராளுமன்றத்தால் ஒப்புதலளிக்கப்பட்டது.

**2023 யூன் 19**

புதிய வலைத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட திறைசேரி உண்டியல் வழங்கல் முறைமை 2023 யூன் 21 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**2023 யூலை 04**

பன்னாட்டு நாணய நிதியத்துடன் ஒப்புதலளிக்கப்பட்ட படுகடன் நிலைபெறத்தக்க இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பங்களிப்புச்செய்வதற்கு விரிவாக்கப்பட்ட நிதிய வசதியுடன் நிலையாகும் விதத்தில், இலங்கையின் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை தொடர்பான கொள்கையொன்றை நிதி அமைச்சு அறிவித்தது.

**2023 ஓகத்து 21**

2022ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2(1)(ஆ)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், அரசாங்கத்தின் உயர்ந்தபட்ச கடன்பெறுகை எல்லையை ரூ.4,979.0 பில்லியனிலிருந்து ரூ.13,979.0 பில்லியனிற்கு திருத்துவதற்கான ஒதுக்கீட்டு (திருத்தம்) சட்டமூலத்திற்கு பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது.

**2023 செத்தெம்பர் 14**

உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளுக்கான பரிமாற்று விஞ்ஞாபனத்தின் பிரகாரம், திறைசேரி முறிகள் பரிமாற்றத்தின் தீர்ப்பனவு முன்னெடுக்கப்பட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்வைப்புக்கள் ரூ. 3,204.5 பில்லியன் தொகை கொண்ட புதிய திறைசேரி முறிகளாக மாற்றப்பட்டன. இவை, நீண்டகால முதிர்வுகளைக் கொண்டிருந்தன. மேலும், ரூ.110.9 பில்லியனைக் கொண்ட ஒன்றுசேர்ந்த வட்டி முதலீட்டாளர்களுக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட திறைசேரி முறி தொகை செலுத்தப்பட்டது.

**2023 செத்தெம்பர் 20**

2023 செத்தெம்பர் 25 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் திறைசேரி முறிகளுக்கான நேரடி வழங்கல் தளத்திற்கான புதிய வலைத்தளம் அடிப்படையிலான முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

**2023 செத்தெம்பர் 21**

மத்திய வங்கியிலிருந்து அரசாங்கத்திற்கு ரூ.344.7 பில்லியன் கொண்ட வெளிநின்ற கொடுகடன்கள் ("தற்காலிக முற்பணங்கள்") முதலாந்தரச் சந்தையில் மத்திய வங்கியினால் கொள்வனவுசெய்யப்படும் அரசாங்கத்தின் ரூ.2,368.4 பில்லியன் கொண்ட வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் ரூ.2,492.3 பில்லியன் கொண்ட இலங்கை ரூபாவில் பெயர்குறிக்கப்பட்ட பத்து (10) புதிய கிரமமாக குறைவடையும் நிலையான கூப்பன் திறைசேரி முறிகளாக மற்றும் ரூ.220.8 பில்லியன் கொண்ட பன்னிரண்டு (12) ஏற்கனவேயுள்ள திறைசேரி உண்டியல்களாக மாற்றம்செய்யப்பட்டு, மத்திய வங்கிச் சட்டத்தின் 129(2)ஆம் பிரிவு மற்றும் 2023ஆம் 12ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் (திருத்தம்) நியதிகளில், 2023 செத்தெம்பர் 21 அன்று தீர்ப்பனவுசெய்யப்பட்டது.

**2023 நவெம்பர் 03**

2023 ஓகத்து 18 அன்று கைச்சாத்திடப்பட்ட மக்கள் வங்கியின் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவின் கடன் நிலுவையின் மறுசீரமைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவு கடன் பரிமாற்றமானது மக்கள் வங்கிக்காக நிறைவேற்றப்பட்டது. உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் கீழ் வழங்கப்பட்ட ஐந்து ஏற்கனவேயுள்ள திறைசேரி முறிகளுக்கு ரூ.27.7 பில்லியன் கொண்ட கடன் ஒதுக்கீடுசெய்யப்பட்டன.

**2024 மாச்சு 11**

திறைசேரி உண்டியல் கட்டம் IIஇன் போது வழங்கப்பட்ட தொகை கூட்டு ஏலப் பற்றாக்குறையாகக் குறைக்கப்பட்டு, 2024 மாச்சு 07 அன்று வழங்கப்பட்ட திருத்தப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில் 10 சதவீதம் கொண்ட வழங்கப்பட்ட கூட்டுத்தொகை அல்லது ரூ.5.0 பில்லியன் இதில் எது உயர்வாக காணப்படுகின்றதோ அது, 2024 மாச்சு 11 அன்று தொடக்கம் நடைமுறைக்கு வந்தன.

திறைசேரி முறி ஏலத்தின் நேரடி வழங்கல் இடைவெளியில் வழங்கப்பட்ட தொகை பன்னாட்டு அடையாள இலக்கங்களிலிருந்து வழங்கப்பட்ட 10 சதவீதம் கொண்ட தொகைக்கு குறைக்கப்பட்டுள்ளதுடன் 2024.03.07 அன்று வழங்கப்பட்ட திருத்தப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில் கட்டம் Iஇல் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இது 2024 மாச்சு 11 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் வந்தது.

## நிதியியல் துறை

### உரிமம்பெற்ற வங்கிகள்

**2023 சனவரி 02**

மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட பிந்திய கிடைக்கப்பெறும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதத்திற்கு இசைவாக +300 அடிப்படை புள்ளிகளின் ஒரு எல்லையுடன் வங்கி வீதத்தை சீராக்கும் வகையில் 2023 சனவரி 03 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது.

**2023 சனவரி 31**

நிதியல்லா கூட்டாண்மைப் படுகடன் பிணையங்களைத் தகுதிப்படுத்தலையும் நிதியல்லா பொது மூலதனப் பங்குரிமை பங்குகளை தகுதிப்படுத்தலையும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் (உரிமம்பெற்ற வங்கிகள்) நியதி திரவச் சொத்து விகிதத்தின் கணிப்பீட்டில் திரவச் சொத்துக்களாக நிர்ணயிக்கும் வகையில் வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் வழங்கப்பட்டதுடன் அத்தகைய சாதனங்கள் பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் திரவத்தன்மை காப்பு விகிதம் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை நிவர்த்தி செய்தல் வேண்டுமெனவும் இத்தீர்மானம் வழங்கப்பட்டது.

**2023 பெப்புருவரி 02**

நிலவும் பேரண்டப் பொருளாதார நிலைமைகளையும் உரிமம்பெற்ற வங்கிகளின் நிலைபெறத்தக்க தன்மையை உறுதிப்படுத்துவதற்கு திரவத்தன்மை மற்றும் மூலதனத்தின் பொருத்தமான மட்டத்தைப் பேணுவதன் முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

**2023 பெப்புருவரி 16**

2022 மே 19 திகதியிடப்பட்ட கட்டளையினால் உள்ளடக்கப்பட்ட ஏற்கனவேயுள்ள இணங்குவிப்பு குறியீடுகளுக்கு மேலதிகமாக, புதிதாக சேர்க்கப்பட்ட 64 இணங்குவிப்பு குறியீடுகளுக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான 100 சதவீத காசு எல்லை வைப்புத் தேவைப்பாட்டினைப் பேணுவது தொடர்பில் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் கட்டளையொன்று வழங்கப்பட்டது.

**2023 பெப்புருவரி 17**

இறக்குமதிகளுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள் மீதான 2022ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தமொன்று 64 புதிய இணங்குவிப்புக் குறியீடுகளுக்கான குறிப்பிடப்பட்ட பணிப்புரையின் ஏற்புடைத்தன்மையை நீடிக்கும் வகையில் வழங்கப்பட்டது.

**2023 மாச்சு 07**

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளினதும் தனிநபர்களினதும் தொழிலை/ வருமானத் துறைகளை மீட்டெடுப்பதற்கான இயலாற்றலைக் கொண்டு அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு பொருத்தான சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கோரப்பட்டன.

| | |
|---|---|
| 2023 ஏப்பிறல் 21 | உரிமம்பெற்ற வங்கிகளுடன் தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கங்களுக்கான தகைமையுடைய/ ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரப்படுத்தல் முகவராண்மையொன்றாக ஐசிஆர்ஏ லங்கா லிமிடெட்டை அங்கீகரிப்பதை நிறுத்துமாறு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2023 ஏப்பிறல் 25 | உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள் தொடர்பில் 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன. இதற்கமைவாக, எடுத்துக்காட்டப்பட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றாமல், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள், முக்கிய முகாமைத்துவ ஆளணிகளின் முகாமைத்துவ கொடுப்பனவுகளையும் பணிப்பாளர் சபைக்கான கொடுப்பனவுகளையும் அதிகரிப்பதிலிருந்து தவிர்ந்துகொள்ளுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. |
| 2023 மே 17 | 2022 மே 19 மற்றும் 2023 பெப்புருவரி 16 அன்று விதிக்கப்பட்ட நாணயக் கடிதத்திற்கு எதிரான குறைந்தபட்ச காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகளை மீளப்பெறுவதற்கு சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2023 மே 18 | இறக்குமதிகளுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள் மீதான 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளையும் 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளையும் இரத்துச்செய்யுமாறு, வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2023 ஓகத்து 25 | குறித்த கடன்வழங்கல் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களைக் குறைத்து இலக்கிடப்பட்ட தினங்களில் குறித்த சதவீதங்களின் மூலம் புதிய மற்றும் ஏற்கனவேயுள்ள ரூபாய் பெயர்குறிக்கப்பட்ட கடன்வழங்கல் சாதனங்களின் வட்டி வீதங்களைக் குறைக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளைக் கேட்டுக்கொள்ளும் விதமாக, உரிமம்பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா பெயர்குறிக்கப்பட்ட கடன்வழங்கல் சாதனங்கள் மீதான ஏற்புடைய வட்டி வீதங்கள் தொடர்பில் நாணய விதிச் சட்டக் கட்டளை வழங்கப்பட்டது. |
| 2023 நவெம்பர் 15 | 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமானது 2023 செத்தெம்பர் 14 அன்று பாராளுமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு 2358/46ஆம் இலக்க வர்த்தமானியில் கட்டளையின்படி வெளியிடப்பட்டதுடன், மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் 2023 நவெம்பர் 15 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் தொழிற்பாட்டிற்கு வந்தது. |
| | 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகளின்) சட்டப் பணிப்புரைகள் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் உறுப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. |
| 2023 நவெம்பர் 23 | 2024 மற்றும் 2025ஆம் ஆண்டுகளுக்கான ஏற்புடைய புதிய உரிமக்கட்டண கட்டமைப்பினை அறிவிக்கும் விதமாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வருடாந்த உரிமக் கட்டணம் தொடர்பான வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் வழங்கப்பட்டது. |
| 2023 நவெம்பர் 27 | வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட தீர்மானங்கள் 2360/02ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. |
| 2023 திசெம்பர் 08 | கடந்த அண்மைக் காலத்தில், நிலவிய அசாதாரண சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, பொது காலக்கெடுக்களும் குறித்த காலவரையறைகளும் நீடிக்கப்பட்டதற்கு மத்தியில், உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மை மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு தொடர்பான 2021ஆம் 16ஆம் இலக்க வங்கித்தொழில் பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன. |
| 2024 பெப்புருவரி 29 | பிரைஸ்வோட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் மற்றும் எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் போன்றன முறையே மேலே குறிப்பிடப்பட்ட பெயர்கள் டெலோயிட் பார்ட்னர்கள் மற்றும் டெலோயிட் அசோசியேட்ஸ்களாக என்ற மாற்றங்களுடன், "உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு தகைமையுடைய கணக்காய்வாளர்களின் பட்டியல்" மீதான 2019ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன. |
| 2024 மாச்சு 25 | வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்ததன்மையை உறுதிப்படுத்தும் வகையில், கொடுகடன் திரட்சி இடர்நேர்வுகளைத் தணிப்பதை நோக்காகக் கொண்டு, 2026 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு, "உரிமம்பெற்ற வங்கிகளின் பாரியளவிலான வெளிப்படுத்துகை" தொடர்பான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2024 மாச்சு 28 | அசாதாரண பேரண்டபொருளாதார சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் நிலைபெறத்தக்க மீட்பினை வசதிப்படுத்தி, உரிமம்பெற்ற வங்கிகளின் சொத்துத்தரத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு, "உரிமம்பெற்ற வங்கிகளின் வியாபார மீட்பு பிரிவுகளை தாபிப்பதற்கான வழிகாட்டல்கள்" மீதான சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் |
| | கம்பனி ஆளுகை மீதான திருத்தப்பட்ட பணிப்புரைகள் |
| **உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி, உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள்** | |
| 2023 சனவரி 05 | பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய மத்திய வங்கியின் நாணயச் சபையானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொருட்டு 2023 சனவரி 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகர் ஒருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தலை நீடித்தது. |
| 2023 சனவரி 18 | 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் 9.1(ஏ) பிரிவின் நியதிகளுக்கமைய பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனமொன்றாக சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் பதிவு இரத்துச்செய்யப்பட்டுள்ளது. |
| 2023 சனவரி 31 | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை ஒன்றிணைக்கும் முதன்மைத் திட்டத்தின் பாகமொன்றாக எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சியுடன் எல்ஓஎல்சி டெவலெப்மன்ட் பினான்ஸ் பிஎல்சியை ஒன்றிணைப்பதைத் தொடர்ந்து, மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் நிதித் தொழிலை முன்னெடுக்கும் பொருட்டு எல்ஓஎல்சி டெவலெப்மன்ட் பினான்ஸ் பிஎல்சிக்கு வழங்கிய உரிமத்தை இரத்துச்செய்துள்ளது. மேலும், நிதி குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எல்ஓஎல்சி டெவலெப்மன்ட் பினான்ஸ் பிஎல்சியின் பதிவானது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது. |
| | போதியளவு மூலதனத்தைப் பேணுவதன் மூலம் நிச்சயமற்ற நேரத்தில் எழக்கூடிய பொருளாதார அதிர்ச்சிகளை ஈர்த்துக்கொள்வதற்கும் வாடிக்கையாளர்களின் கொடுகடன் தேவைகளை தொடர்ச்சியாக ஆதரவளிப்பதற்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் இயலாற்றலையும் வலுப்படுத்துவதற்காக பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்தல் அல்லது இலாபங்களை மீள அனுப்புதல் மீதான வழிகாட்டல் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| 2023 பெப்புருவரி 02 | குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஐசிஆர்ஏ லங்கா லிமிடெட்டானது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் தர மதிப்பீட்டு நிறுவனமாக நீக்கப்பட்டுள்ளதாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டன. |
| 2023 பெப்புருவரி 08 | நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் நாணயச் சபையினால் 2018 யூலை 25 அன்று உரிமம் இரத்துச்செய்யப்பட்ட த ஸ்டான்டட் கிரெடிற் பினான்ஸ் லிமிடெட்டிற்கு கலைப்பாளரை நியமிக்க கொழும்பு வர்த்தக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. |
| 2023 மாச்சு 03 | தற்போது நிலவுகின்ற பேரண்ட பொருளாதார நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் பொருத்தமான சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. |
| 2023 மாச்சு 21 | நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் நாணயச் சபையினால் 2020 மே 22 அன்று உரிமம் இரத்துச் செய்யப்பட்ட த பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்கு கலைப்பாளரை நியமிக்க கொழும்பு வர்த்தக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. |
| 2023 ஏப்பிறல் 25 | மத்திய வங்கியின் நாணய சபையின் வழிகாட்டலின்படி 2023 ஏப்பிறல் 25 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் நிதித் தொழில் சட்டத்தின் 37 (1) ஆம் பிரிவின் கீழ் பிம்புத் பினான்ஸ் பிஎல்சிக்கு உரிமத்தை இரத்துச்செய்தல் தொடர்பான அறிவித்தலை வழங்கியுள்ளது. |
| 2023 யூன் 09 | நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் நாணயச் சபையினால் 2018 மாச்சு 05 அன்று உரிமம் இரத்துச் செய்யப்பட்ட சென்ட்ரல் இன்வெஸ்ட்மென்ட் அண்ட் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு கலைப்பாளரை நியமிக்க கொழும்பு வர்த்தக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. |
| 2023 யூலை 05 | பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய மத்திய வங்கியின் நாணயச் சபையானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொருட்டு 2023 யூலை 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகர் ஒருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தலை நீடித்தது. |
| 2023 யூலை 31 | முதன்மைத் திட்டத்தின் பாகமொன்றாக கன்றிச் பைனான்ஸ் லிமிடெட் 2023 யூலை 31 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் நே'ன் லங்கா பைனான்ஸ் பிஎல்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்துள்ள நிறுவனம் நே'ன் லங்கா பைனான்ஸ் பிஎல்சி ஆகும். |
| 2023 செத்தெம்பர் 01 | பிம்புத் பினான்ஸ் பிஎல்சி எதிர்கொண்ட நெருக்கடி நிலைமைகளை மீட்பதற்கு திருப்திகரமான முன்னேற்றம் எதுவும் மேற்கொள்ளாமையினால் பிம்புத் பினான்ஸ் பிஎல்சிக்கு நிதித்தொழிலை கொண்டுநடத்துவதற்காக வழங்கப்பட்ட உரிமத்தை மத்திய வங்கியின் நாணய சபையின் வழிகாட்டலின்படி 2023 செத்தெம்பர் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் இரத்துச்செய்யப்பட்டுள்ளது. |
| 2023 திசெம்பர் 15 | நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் ஈரிஜ பைனான்ஸ் லிமிடெட்டிற்கு கலைப்பாளரை நியமிக்க கொழும்பு வர்த்தக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. |
| 2024 சனவரி 05 | பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய மத்திய வங்கியானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொருட்டு 2024 சனவரி 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகர் ஒருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தலை நீடித்துள்ளது. |
| 2024 பெப்புருவரி 13 | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வியாபாரம் மற்றும் கூட்டாண்மை அலுவல்கள் முன்னெடுக்கப்படும் முறை அல்லது வேறு ஏதேனும் நோக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தகவல்களை உரிய காலத்திலும், துல்லியமாகவும், சீராகவும் மற்றும் முழுமையாகப் பெற்றுக்கொள்வதை குறிக்கோளாகக் கொண்டு, காலாந்திர அறிக்கையிடல் தேவைப்பாடுகள் மீதான பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | நடுத்தர காலத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவிலான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நீண்டகால நிலைபெறும் தன்மையினை உறுதிசெய்யும் முதன்மைத் திட்டத்தின் கட்டம் II இனை நடைமுறைப்படுத்தல். |
| | நடப்பு சந்தை அபிவிருத்திகளுக்கமைவாக நிதித்தொழில் சட்டம் மற்றும் நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம் என்பவற்றிற்கான திருத்தங்கள் உள்ளடங்கலாக தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைத் திருத்தம்செய்தல். |
| | வங்கியல்லாத் துறையின் உறுதிப்பாட்டினை மேம்படுத்துகின்ற அதேவேளை மேற்பார்வை மீளாய்வுச் செயன்முறையினை வலுப்படுத்துவதற்கு விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளைக் கொண்டுவருதல். |

**ஏனைய நிதியியல் துறையுடன் தொடர்புடைய கொள்கை வழிமுறைகள்**

| | |
|---|---|
| 2023 ஓகத்து 08 | நிதியியல் பணி வழங்குநர்களின் நியாயமான, வெளிப்படைத்தன்மையிலான, மற்றும் ஒழுக்கவியல் தொழில் நடைத்தையை ஊக்குவித்து, சந்தை நடத்தை மேற்பார்வை மற்றும் நடைமுறைப்படுத்தலை கொண்டுநடாத்துவதற்கு மத்திய வங்கிக்கான அடிப்படையை வழங்கும் வகையில், மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் பணி வழங்குநர்களுக்கான ஏற்புடைய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு மீதான ஒழுங்குவிதிகள் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 10(இ)ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டன. |
| 2024 சனவரி 31<br>2024 பெப்புருவரி 01<br>2024 பெப்புருவரி 06 | உலகவங்கியின் நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் உலக வங்கிக் குழு, நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியின் உறுப்பினராக விளங்கும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்புகளுக்கிடையிலான கடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. |